**செய்தி வெளியீடு எண்:108** **நாள்:11.02.2021**

## செய்தி வெளியீடு

மத்திய அரசால் இந்தியாவில் உள்ள குழந்தைகளின் உரிமைகளை பாதுகாக்கும் முகத்தால் 2005ம் ஆண்டு "குழந்தைகள் உரிமைகளை பாதுகாப்பதற்கான ஆணையங்கள் சட்டம் 2005 என்ற சட்டத்தை நடைமுறைப்படுத்தியது. அதன்படி, தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் மற்றும் மாநில குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையங்கள் முறையே விதிகள் 3 மற்றும் 17ன் படி அமைக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டத்தில் பிரிவு– 13(1) ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் படி குழந்தை உரிமைகள் பாதுகப்பு ஆணையம் குழந்தை நலன் சார்ந்த அனைத்து சட்டங்களின் செயலாக்கம் குறித்தும் அந்த சட்டங்களை அமல்படுத்த கூடிய அந்தந்த துறை அலுவலர்களுடன் அவர்கள் கொடுக்கும் தரவுகளின் அடிப்படையில் மீளாய்வு செய்து, கொள்கை ரீதியான மாற்றங்களை அரசுக்கு பரித்துரை செய்வதற்கான அதிகாரம் ஆணையத்திற்கு உள்ளது.

தற்போது புதிய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் 19.01.2021 மற்றும் 20.01.2021 அன்று பணிபொறுப்பேற்றுக்கொண்ட நிலையில் கடந்த 02.02.2021 ஆணையத்தின்முதல் கூட்டம் நடத்தப்பட்டது. அந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் படி குழந்தைகள் சார்ந்த சட்டங்கள் மற்றும் திட்டங்கள் குறித்து அனைத்துத் துறைதலைவர்களுடன் கலந்துரையாடி ஆணையத்திற்கு எந்த அளவு அவர்களால் பங்களிப்பு செய்ய முடியும் என்பது குறித்து கலந்தாலோசனை செய்ய முடிவு செய்யப்பட்டது. இதை தொடர்ந்து சுகாதாரம், கல்வி, காவல்துறை, சமூக பாதுகாப்புத்துறை, உள்ளிட்ட 15 துறைகளைச் சேர்ந்த அனைத்து துறை தலைவர்களுடனும், சிறப்பு நிகழ்ச்சி 2021 பிப்ரவரி 10 ஆம் தேதி, நுங்கம்பாக்கத்தின் தி பார்க் ஹோட்டலில் சமூகநலத்துறை அரசு செயலர் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. ஆணையத்தலைவர் விழாத் தலைமையுரையும், அரசு செயலர் சிறப்புரையும் ஆற்றினார்கள். ஆணையத்தின் சார்பாக உறுப்பினர்கள் முனைவர் சரண்யா ஜெய்குமார் மற்றும் துரைராஜ் அவர்கள், கலந்து கொண்டு பல்வேறு துறைகள் சார்ந்த ஆணையத்திற்கு வழங்க வேண்டிய தரவுகள் மற்றும் பங்கு

பணி குறித்து விரிவாக எடுத்துரைத்தனர். மேலும், இந்நிகழ்ச்சியில் மற்ற பிற உறுப்பினர்களான முனைவர் ராமராஜ், டாக்டர் மல்லிகை மற்றும் முரளிகுமார் அவர்களும் கலந்து கொண்டனர்.

அனைத்து பங்கேற்பாளர்களும் அவரவர் துறைசார்ந்த விஷயங்கள் குறித்து சிறப்பான முறையில் எடுத்துரைத்தனர். இதன் விளைவாக ஆணையம் குறித்து அவர்களது எண்ணம் மற்றும் சிந்தை ஓட்டத்தை பதிவு செய்யவும், குழந்தை நலன் சார்ந்த சட்டங்களை செயல்படுத்த கூடிய பல்வேறு துறைகளுடன் ஆணையம் இணைந்து இணக்கமாக செயல்படவும் வழிவகை செய்யப்பட்டது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**